

Saidai Duraisamy's
Manidhanaeyam Free IAS Academy
(Run by Manidha Naeyam Charitable Trust)
28, 1st Main Road, CIT Nagar, Chennai - 35 (HO).
Mail Address: manidhanaeyam@gmail.com
Website: www.mntfreeias.com

| வினாத்தொகுப்பு எண்: |
| --- |
| |

பதிவு எண்: | | | | | | | | | | |

# TNPSC - தொகுதி - IV & VAO தேர்வு - இணைய வழி தொடர் மாதிரி தேர்வு

## இந்த வினாப்புத்தகம்
## பகுதி-அ (பொதுத் தமிழ்) உள்ளடக்கியது

**கால அளவு: ஒரு மணி நேரம் முப்பது நிமிடம்** **மொத்த மதிப்பெண்கள்: 150**

வினாக்களுக்கு பதிலளிக்கும் முன் கீழ்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்

## முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத்தொகுப்பு, தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக வழங்கப்படும்.
2. இந்த வினாத்தொகுப்பு, 100 வினாக்களைக் கொண்டுள்ளது.
3. விடையளிக்கத் தொடங்கும் முன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும், இடையில் பெற்றுத்தாள்கள் எவையும் இல்லை என்பதையும் உறுதி செய்து கொள்ளவும். வினா தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை முதல் பத்து நிமிடங்களுக்குள் அறைக்கண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு வினாத்தொகுப்பினை பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு இது குறித்து முறையிட்டால் வினாத் தொகுப்பு மாற்றித் தரப்படமாட்டாது.
4. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். எல்லா வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
5. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத்தொகுப்பில் எழுதக்கூடாது.
6. விடைத்தாள் ஒன்று விடைகளை குறிப்பதற்கு அறைக்கண்காணிப்பாளரால். உங்களுக்கு வழங்கப்படும். விடைகளை குறிப்பது உள்ளிட்ட அவசியம் பின்பற்றப்பட வேண்டிய அறிவுரைகள் விடைத்தாளிலும், தேர்வுக்கூட அனுமதிச் சீட்டிலும் வழங்கப்பட்டுள்ளன.
7. உங்களுடைய வினாத்தொகுப்பு எண்ணை (Question Booklet Number) விடைத்தாளின் முதல் பக்கத்தில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக்காட்டவேண்டும். வினாத்தொகுப்பு எண்ணை விடைத்தாளில் சரியாகக் குறித்துக் காட்டத் தவறினாலோ அல்லது குறிக்க தவறினாலோ உங்களுடைய விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
8. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C), (D), (E) என ஐந்து பதில்களைக் (விடைகள்) கொண்டுள்ளது. நீங்கள் (A) அல்லது (B) அல்லது (C) அல்லது (D) இவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடை இருப்பதாக நீங்கள் கருதினால், மிகச்சரியானது என நீங்கள் எதைக்கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். உங்களுக்கு விடை தெரியவில்லை, எனில், நீங்கள் (E) என்பதை அவசியம் நிரப்பவேண்டும். எப்படியாயினும், ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடைதான் தேர்ந்தெடுக்க வேண்டும். நீங்கள் ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால், அவற்றுள் ஒரு விடை சரியானதாக இருந்தாலும் அந்த விடை தவறானதாகவே கருதப்படும்.
9. நீங்கள் வினாத்தொகுப்பின் எந்தப்பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத்தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வு அறையை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளை கண்காணிப்பாளரிடம் கொடுத்துவிடவேண்டும். இவ்வினாத் தொகுப்பினை தேர்வு முடிந்த பின்னர் மட்டுமே நீங்கள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவீர்கள்.
10. குறிப்புகள் எழுதி பார்ப்பதற்கு வினா தொகுப்பின் கடைசி பக்கத்திற்கு முன் உள்ள பக்கங்களை பயன்படுத்திக் கொள்ளலாம். இதைத்தவிர, வினாத்தொகுப்பின் எந்த இடத்திலும் எந்தவித குறிப்புகளையும் எழுதக்கூடாது. இந்த அறிவுரை கண்டிப்பாக பின்பற்றப்படவேண்டும்.
11. நீங்கள் மேற்கண்ட அறிவுரைகளில் எவற்றையாவது பின்பற்ற தவறினால் தேர்வாணையம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

[Turn over]



Saidai Duraisamy's
**Manidhanaeyam Free IAS Academy**
(Run by Manidha Naeyam Charitable Trust)
28, 1st Main Road, CIT Nagar, Chennai - 35 (HO).
Mail Address: manidhanaeyam@gmail.com
Website: www.mntfreeias.com

| Question Booklet No: |
| --- |
| |

Register Number: | | | | | | | | | | |

## TNPSC - Group - IV & VAO Exam - Online Test Series
## This Booklet Contains
## Part-A (Tamil Eligibility-Cum-Scoring Test)

**Duration: One Hour Thirty Minutes** — **Total Marks : 150**

**Read the following instructions carefully before you begin to answer the questions**

## IMPORTANT INSTRUCTIONS

1. You will be supplied with this question booklet 15 minutes prior to the commencement of the examination.
2. This Question Booklet contains 100 questions.
3. Before answering the questions, you .shall check whether all the questions are printed serially and ensure that there are no blank pages in the question booklet. If any defect is noticed in the question booklet, it shall be reported to the invigilator within the first 10 minutes. and get it· replaced with a complete question booklet. If the defect is reported after the commencement of the examination, it will not be replaced.
4. Answer all the questions. All the questions carry equal marks.
5. You must write your Register Number in the space provided on the top right side of this page. Do not write anything else on the Question Booklet.
6. An answer sheet will be supplied to you separately by the room invigilator to shade the answers. Instructions regarding filling of answers etc., which are to be followed mandatorily, are provided in the answer sheet and in the mem"oranduin of admission (Hall Ticket).
7. You shall write and shade your question booklet number in the space provided on page one of the answer sheet with BLACK INK BALL POINT PEN. If you do not shade correctly or fail to shade the question booklet number, your answer sheet will be invalidated.
8. Each question comprises of five responses (answers) : i.e. (A), (B), (C), (D) and (E). You have to select ONLY ONE correct answer from (A) or (B) or (C) or (D) and shade the same in your answer sheet. If you feel that there are more than one 90rrect answer, shade the one which you consider the best. If you do not know the answer, you have to mandatorily shade (E). In any case, choose ONLY ONE answer for each question. If you shade more than one answer for a question, it will be treated as a wrong answer even if one of the given answers happens to be correct.
9. You should not remove or tear off any sheet from this Question Booklet.You are not allowed to take this Question Booklet and the Answer Sheet out of the Examination Room during the time of examination. After the examination. you must hand over your Answer Sheet to the Invigilator. You are allowed to take the Question Booklet with you only after the Examination is over.
10. You should not make any marking in the question booklet except in the sheets before the last page of the question booklet, which can be used for rough work. This should be strictly adhered to.
11. Failure to comply with any of the above instructions will render you liable for such action as the Commission may decide at their discretion.

[Turn over]

## பகுதி-அ - பொது தமிழ்

## Part-A- General Tamil

### 10 ஆம் வகுப்பு – பாடம் – 4, 5, 6

| | | | |
|---|---|---|---|
| வினாக்கள் | : 1 - 100 | மொத்த மதிப்பெண்கள் | : 150 |
| Questions | : 1 - 100 | Total Marks | : 150 |

1. இதழியல், செயற்கை நுண்ணறிவு குறிப்பிடத்தகுந்த மாறுதல்களைச் செய்து வருகிறது. அவற்றுள் விந்தையான ஒன்று, இயல்பான மொழிநடையை உருவாக்குதல் என்னும் மென்பொருள். அதற்கு ------------ என்று பெயர். தகவல்களைக் கொடுத்தால் போதும் இது அழகான கட்டுரையைச் சில நொடிகளில் உருவாக்கிவிடும்.
   (A) விகாஸ்பீடியா
   (B) மித்திரன்
   (C) வேர்டுஸ்மித்
   (D) இவற்றில் ஏதுமில்லை

2. 2016ல் -------- நிறுவனத்தின் செயற்கை நிமிடங்களில் கணினியான ------------- சில நிமிடங்களில் இரண்டு கோடித் தரவுகளை அலசி நோயாளி ஒருவரின் புற்றுநோயைக் கண்டுபிடித்தது.
   (A) ஐ.பி.எம், வாட்சன்
   (B) மைக்ரோசாப்ட், எக்ஸ் பாக்ஸ்
   (C) கூகுள், ஆல்பபெட்
   (D) இவற்றில் ஏதுமில்லை

3. --------- நாட்டில் ஐம்பதுக்கும் மேற்பட்ட மருத்துவமனைகள், இயந்திர மனிதர்களைப் பணிக்கு அமர்த்தியுள்ளன. அவை அங்கு வரும் நோயாளிகளின் குரலையும் முகத்தையும் அடையாளம் கண்டு அவர்களின் கேள்விகளுக்குப் பதில் சொல்கின்றன.
   (A) மலேசியா
   (B) அமெரிக்கா
   (C) சீனா
   (D) அயர்லாந்து

4. சொல்லும் பொருளும் சரியானது எது?
   1. சுடினும் - சுட்டாலும்
   2. மாளாத - தீராத
   3. மாயம் - விளையாட்டு
   (A) 1 சரி
   (B) 2 சரி
   (C) 3 சரி
   (D) 1,2,3 சரி

5. வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால் மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால் மீளாத் துயர் தரினும் வித்துவக்கோட்டம்மா – வித்துவக்கோடு என்னும் ஊர் எங்கு உள்ளதுஃ இங்குள்ள இறைவனான உய்யவந்த பெருமாளை அன்னையாக உருவகித்துப் பாடியவர் யார்?
   (A) ஆந்திரா மாநிலம் திருப்பதி, நம்மாழ்வார்
   (B) கேரளா மாநிலம் பாலக்காடு, குலசேகர ஆழ்வார்
   (C) தமிழ்நாடு மாநிலம் சென்னை, கம்பர்
   (D) கர்நாடகம் மாநிலம் பெங்கரு, சுந்தரர்

6. விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்லக், கரு வளர் வானத்து இசையில் தோன்றி, உரு அறிவாரா ஒன்றன் ஊழியும், உந்து வளி கிளிர்ந்த ஊழி ஊழ் ஊழியும் செந் தீச்சுடரிய ஊழியும் - என்ற பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் எது?
   (A) பரிபாடல்
   (B) கலித்தொகை
   (C) ஐங்குநுறூறு
   (D) அகநானூறு

7. பனியொடு தண் பெயல் தலைஇய ஊழியும், அவையிற்ற உள் முறை வெள்ளம் மூழ்கி ஆர்தருபு, மீண்டும் பீடு உயர்வு ஈண்டி, அவற்றிற்கும் உள்ளீடு ஆகிய இரு நிலத்து ஊழியும் - என்ற பாடல்வரியின் ஆசிரியர் யார்?
   (A) சேக்கிழார்
   (B) ஔவையார்
   (C) கீரந்தையார்
   (D) சீத்திலை சாத்தனார்

8. சொல்லும் பொருளும் சரியானது எது
   1. விசும்பு - வானம்
   2. ஊழி - யுகம்
   3. ஊழ் - முறை
   4. தண்பெயல் - குளிர்ந்த மழை
   (A) அனைத்தும் சரி
   (B) 1,2 சரி
   (C) 1,2,3 சரி
   (D) 2,3,4 சரி

9. சொல்லும் பொருளும் சரியானது எது?
   1. ஆர்தருபு – வெள்ளத்தில் மூழ்கிக் கிடந்த
   2. பீடு – சிறப்பு
   3. ஈண்டி – செறிந்து திரண்டு
   4. நவ்வி – கரடி
   (A) அனைத்தும் சரி
   (B) 1,2 சரி
   (C) 1,2,3 சரி
   (D) 2,3,4 சரி

10. --------- ஆண்டுகளுக்கு முன் ------- என்பவர் -------- நூலில் திருஅண்டப் பகுதியில் இவ்வாறாக எழுதுகிறார். அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம் - சிறிய ஆகப் பெரியோன் தெரியின்.
   (A) 1000 கம்பர், கம்பராமாயணம்
   (B) 1100 இளங்கோவடிகள், சிலப்பதிகாரம்
   (C) 1200 சீத்தலைச்சாத்தனார், மணிமேகலை
   (D) 1300 மாணிக்கவாசகர், திருவாசகம்

11. பெரியார் அறிவியல் மொழில்நுட்ப வளாகம் எங்கு உள்ளது?
   (A) ஈரோடு, கோபிசெட்டி பாளையம்
   (B) திருவாரூர், மன்னார்குடி
   (C) சென்னை, கோட்டூர்புரம்
   (D) இவற்றில் ஏதுமில்லை

12. பெரியார் அறிவியல் தொழில்நுட்பக் கழகத்தில் உள்ள கோளரங்கம் தனித்துவம் வாய்ந்தது. இந்தியாவிலேயே முதன்முதலாக 360 பாகை அரைவட்ட வானத்திரை இங்குதான் உள்ளது. இது ---------- ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.
   (A) 2000
   (B) 2003
   (C) 2006
   (D) 2009

13. கீழ்கண்ட கூற்றுகளில் சரியானது எது?
   1. மாற்றத்திற்கு ஏற்பத் தகவமைத்துக் கொள்ளும் திறனே புத்திக்கூர்மை
   2. அறியாமை அறிவாற்றலின் மிகப்பெரிய எதிரியல்ல. அது அறிவின் மாயையே
   (A) 1 மட்டும் சரி
   (B) 2 சரி
   (C) இரண்டும் சரி
   (D) இரண்டும் தவறு

14. கருத்துளை குறித்த தன்னுடைய ஆய்வை ஐன்ஸ்டைன் போல, கோட்டுபாடுகளாக வெளியிடாமல், ---------- இயக்கத்தோடு ஒப்பிட்டு ஸ்டீபன் ஹாக்கிங் விளங்கியதால் உலகம் கருத்துளைக் கோட்பாட்டை எளிதில் புரிந்து கொண்டது.
(A) விண்மீன்
(B) சூரியன்
(C) காற்று
(D) ஆகாயம்

15. உடலில் ஏற்பட்ட உறுப்பு இழப்போ, ஊனமோ ஒருவருக்குக் குறையாகாது, ஊக்கமும் உழைப்பும் சேர்ந்த ஆளுமைத் தன்மை இல்லாமல் இருப்பதே குறையாகும் என்ற உண்மையை உலகிற்கு எடுத்துக் காட்டியவர் ----?
(A) கலிலியோ
(B) எடிசன்
(C) நியூட்டன்
(D) ஸ்டீபன் ஹாக்கிங்

16. விண்ணைத் தாண்டிய தன்னம்பிக்கை குறும்படம் யாரைப்பற்றியது?
(A) கல்பனா சாவ்லா
(B) ஸ்டீபன் ஹாக்கிங்
(C) ரைட் சகோதரர்கள்
(D) இவற்றில் ஏதுமில்லை

17. உயிர்திணைக்குரிய பால் பகுப்புகள் - சரியானது எது?
1. வீரன், அண்ணன், மருதன் - ஆண்பால்
2. மகள், அரசி, தலைவி – பெண்பால்
3. மக்கள், பெண்கள், ஆடவர் - பலர்பால்
4. நாற்காலி, மேசை – பலவின்பால்
(A) 1 சரி
(B) 1,2 சரி
(C) 1,2,3 சரி
(D) அனைத்தும் சரி

18. என் அம்மை வந்தாள் என்று மாட்டைப் பார்த்துக் கூறுவது ----------- ஆகும். இங்கு உவப்பின் காரணமாக அஃறிணை உயர்திணையாகக் கொள்ளப்பட்டது.
(A) திணை வழுவமைதி
(B) பால் வழுவமைதி
(C) இட வழுவமைதி
(D) கால வழுவமைதி

19. கலைச்சொல் அறிவோம் - சரியானது எது?
    1. Nanotechnology – மீநுண்தொழில்நுட்பம்
    2. Space Technology – விண்வெளித்தொழில்நுட்பம்
    3. Biotechnology – உயிர் தொழில்நுட்பம்
    4. Cosmic Rays – விண்வெளிக் கதிர்கள்

(A) 1,2 சரி
(B) 2,3 சரி
(C) 1,2,3 சரி
(D) அனைத்தும் சரி

20. ஒரு நாடு எவ்வளவு ---------- பயன்படுத்துகிறது என்பதைக் கொண்டு அதன் தொழில் வளர்ச்சியை மதிப்பிடுவார்கள். அதுபோல ஒரு நாட்டின் மொழிபெயர்ப்பு நூல்களின் எண்ணிக்கையைக் கொண்டு அந்நாட்டின் பண்பாட்டையும் அறிவையும் மதிப்பிடுவார்கள்.

(A) காற்று ஆற்றல்
(B) மின்னாற்றல்
(C) சூரிய ஆற்றல்
(D) நீர் ஆற்றல்

21. வால்காவிலிருந்து கங்கை வரை என்ற நூலை மொழிபெயர்த்த வருடம் மற்றும் ஆசிரியர் - சரியானது எது?
    1. 1949 – கணமுத்தையா மொழிபெயர்ப்பு
    2. 2016 – டாக்டர் என். ஸ்ரீதர் மொழிபெயர்ப்பு
    3. 2016 – முத்து மீனாட்சி மொழி பெயர்ப்பு
    4. 2018 – யூமா வாசுகி மொழி பெயர்ப்பு

(A) 1, 2 சரி
(B) 2, 3 சரி
(C) 3, 4 சரி
(D) அனைத்தும் சரி

22. பிரான்சு தேசிய நூற்கூடத்தில் உள்ள அச்சிடப்பெறாத நூல்கள் சிலவற்றின் தலைப்புகள் எவை?

(A) மாணிக்கவாசகர் பிள்ளைத்தமிழ்
(B) சரளிப்புத்தகம்
(C) புதுச்சேரி அம்மன் பிள்ளைத்தமிழ்
(D) அனைத்தும் சரி

23. கீழ்க்கண்ட கூற்றை கவனி

கூற்று 1 - இயல்பான மொழிநடையை உருவாக்கும் மென்பொருள் வேர்டு ஸ்மித்.

கூற்று 2 – ஒரு மென்பொருள் அல்லது கணினிச் செயல்திட்ட வரைவை செயற்கை நுண்ணறிவு எனலாம்.

(A) கூற்று 1 2 சரி
(B) கூற்று 1 2 தவறு
(C) கூற்று 1 சரி 2 தவறு
(D) கூற்று 1 தவறு 2 சரி

24. திருவிளையாடற்புராணம் மதுரைக்காண்டம், கூடற்காண்டம், ---------- காண்டம் என்ற மூன்று காண்டங்களும் ------------- படலங்களும் உடையது

(A) திருக்கழுக்குன்றம், 105
(B) திருமறைக்காடு, 55
(C) திருவாவடுதுறை, 100
(D) திருவாலவாய், 64

25. மாசற விசித்த வார்புறு வள்பின் என்று --------- புலவர் --------- மன்னனைப் பாடினார்.

(A) மோசிகீரனார், தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை
(B) ஔவையார், அதியமான்
(C) பரணர், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்
(D) கபிலர், வல்வில் ஓரி

26. இடைக்காடனாரின் பாடலை இகழந்தவர் --------, இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் ----------

(A) அமைச்சர், மன்னன்
(B) அமைச்சர், இறைவன்
(C) இறைவன், மன்னன்
(D) மன்னன், இறைவன்

27. சிலப்பதிகாரத்தில் ----------- ஆடிய ------------ வகை ஆடல்களில் குடக்கூத்து கரகாட்டத்திற்கு அடிப்படை என்றும் கருதப்படுகிறது. இது தமிழகத்தில் மதுரை, திண்டுக்கல், திருச்சி, தஞ்சாவூர், கோயம்புத்தூர், திருநெல்வேலி முதலிய மாவட்டங்களில் நிகழ்த்தப்படுகிறது.

(A) மாதவி, பதினொரு
(B) ஆதிரை, நூறு
(C) கண்ணகி, ஐம்பது
(D) அறவண அடிகள், முப்பது

28. பொருத்தமானதைத் தேர்ந்தெடு.

a. மயிலாட்டம் - 1. கரகாட்டத்தின் துணை ஆட்டம்
b. ஒயிலாட்டம் - 2. கம்பீரத்துடன் ஆடுதல்
c. புலியாட்டம் - 3. வேளாண்மை செய்வோரின் கலையாக இருந்தது
d. தெருக்கூத்து - 4. தமிழ் மக்களின் வீரத்தைச் சொல்லும் கலை

(A) 4 1 3 2
(B) 3 4 2 1
(C) 1 2 4 3
(D) 4 3 1 2

29. பாவை குறித்த செய்திகள் சங்ககாலம் முதல் பதினெட்டாம் நூற்றாண்டு வரையான தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. --------- நூலில் மரப்பாவையைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளது

(A) வளையாபதி
(B) மணிமேகலை
(C) நாலடியார்
(D) திருக்குறள்

30. “ஓசை தரும் இன்பம் உவமையிலா இன்பமடா” யார் பாடல்

(A) பாரதிதாசன்
(B) பாரதியார்
(C) சுரதா
(D) வண்ணதாசன்

31. செம்பொனடிச்சிறு கிங் கிணியோடு சிலம்பு கலந்தாடத்
திருவரை யரைஞா ணரைமணி யொடு மொளி திகழரை
வடமாடப் பைம்பொ னசும்பிய தொந்தி யொடுஞ்சிறு பண்டி
சரிந்தாடப் பட்ட நுதற்பொலி பொட்டொடு வட்டச் சுட்டி
பதிந்தாடக் - என்ற பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் எது?

(A) குற்றாலக் குறவஞ்சி
(B) முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்
(C) தாயுமானவர் பாடல்கள்
(D) திருவாசகம்

32. அணிகலன்கள் சரியான பொருந்தியது எது?

a. சிலம்பு, கிண்கணி - காலில் அணிவது
b. அரைநாண் - இடையில் அணிவது
c. சுட்டி - நெற்றியில் அணிவது
d. குண்டலம், குழை - காதில் அணிவது
e. சூழி - தலையில் அணிவது

(A) அனைத்தும் சரி
(B) 1,2 4 சரி
(C) 3, 4 சரி
(D) 2,3,4 சரி

33. தாதுகு சோலை தோறும் சண்பக் காடு தோறும்
போதவிழ் பொய்கை தோறும் புதுமணத் தடங்கள் தோறும்
மாதவி வேலிப் பூக வனந்தொறும் வயல்கள் தோறும்
ஓதிய உடம்பு தோறும் உயிரென உலாய தன்றே - இந்த பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?

(A) பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்
(B) கம்பராமயணம், கம்பர்
(C) நான்மணிக்கடிகை, விளம்பி நாகனார்
(D) மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

34. எற்பாடு என்றால் என்ன? சரியான கூற்று எது?

1. எல் என்றால் ஞாயிறு
2. பாடு என்றால் மறையும் நேரம்
3. எல் + பாடு – எற்பாடு
4. எற்பாடு – பிற்பகல் 2 மணி முதல் 6 மணி வரை

(A) 1 சரி
(B) 1, 2 சரி
(C) 1, 2, 3 சரி
(D) அனைத்தும் சரி

35. பாலை திணைக்குரிய பெரும்பொழுது மற்றும் சிறுபொழுது யாது?

(A) இளவேனில், முதுவேனில் பின்பனி, நண்பகல்
(B) கார்காலம், மாலை
(C) ஆறு பெரும்பொழுதுகள், வைகறை
(D) ஆறு பெரும்பொழுதுகள், எற்பாடு

36. கலைசொல் அறிவோம் சரியானது எது?

   1. Aesthetics – அழகியல், முருகியல்
   2. Terminology – கலைச்சொல்
   3. Artifacts – கலைப்படைப்புகள்
   4. Myth – தொன்மம்

   (A) 1 சரி
   (B) 1, 2 சரி
   (C) 1, 2, 3 சரி
   (D) அனைத்தும் சரி

37. சரியான இணை எது?

   a. வெளிப்படை விடை – 3
   b. குறிப்பு விடை – 4
   c. நிரல்நிறை பொருள்கோள் - 2
   d. தன்மை நவிற்சி – 5

   (A) a, b மட்டும்
   (B) a, c மட்டும்
   (C) a, b, c மட்டும்
   (D) அனைத்தும்

38. முல்லை நிலம் பற்றிய கூற்றை ஆராய்க.

   கூற்று 1 – முல்லை நிலத்தின் மரம் - கொன்றை, காயா போன்றவை
   கூற்று 2 – நீர் - அருவிநீர், மனைக்கிணறு

   (A) கூற்று 1 மட்டும் சரி
   (B) கூற்று 1, 2 சரி
   (C) கூற்று 2 மட்டும் சரி
   (D) கூற்று 1, 2 தவறு

39. கீழ்காண்பவையுள் எது சரியன்று

   1. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் - ஔவை
   2. எண் என்ப ஏனை எழுத்தென்ப – வள்ளுவர்
   3. நாடும் மொழியும் நமதிரு கண்கள் - பாரதிதாசன்

   (A) 1 மட்டும்
   (B) 1, 3 மட்டும்
   (C) 3 மட்டும்
   (D) அனைத்தும்

40. கருந்துளை பற்றிய கூற்றை ஆராய்க.
   1. கருந்துளையினுள் செல்லும் எதும் தப்ப இயலாது
   2. கருந்துளையின் எல்லையிலிருந்து கதிர்வீச்சுகள் வெளியாகும்.
   3. கருந்துளை பொதுவாக அடர்கருப்பாக இருக்கும்.
   (A) 1, 2, 3 சரி
   (B) 1, 2 சரி 3 தவறு
   (C) 1 சரி 2, 3 தவறு
   (D) 1, 3 சரி 2 தவறு

41. கமலாலயன் பற்றி
   கூற்று 1 - இயற்பெயர் வே.குணசேகரன்
   கூற்று 2 – உனக்கு எழுதத் தெரியாது என்ற தலைப்பில் நூல் படைத்தார்.
   (A) கூற்று 1 சரி
   (B) கூற்று 2 சரி
   (C) கூற்று 1, 2 சரி
   (D) கூற்று 1, 2 தவறு

42. எழுதுகோல் இருக்கிறதா? என்பது என்னவகை வினா
   (A) அறிவினா
   (B) அறியாவினா
   (C) கொளல் வினா
   (D) கொடை வினா

43. சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச்
   சுமக்கின்றன ஒல்லித் தண்டுகள் - யாருடைய வரிகள்
   (A) உமா மகேஸ்வரி
   (B) உமா பரமேஸ்வரி
   (C) ராஜம் கிருஷ்ணன்
   (D) எம்.பி.அகிலா

44. முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் யாரை பற்றி பாடப்பெற்றது.
   (A) சொக்கநாதர்
   (B) பெருமாள்
   (C) சிவபெருமான்
   (D) முருகன்

45. சா. கந்தசாமி நூல்களில் சரி அல்லாததை தெரிவு செய்க.
   (A) சாயாவனம்
   (B) தொலைந்து போனவர்கள்
   (C) விசாரனை கமிஷன்
   (D) சந்தன குமாரி

46. தவறான இணையைத் தேர்ந்தெடு.
    (A) தாழை – பாலைத்திணை
    (B) தோன்றி – முல்லைத் திணை
    (C) காந்தள் - குறிஞ்சி திணை
    (D) தாமரை - மருதத் திணை

47. கீழ்க்கண்ட கூற்றை கவனி
    1. ஒரு எழுவாய் / பல எழுவாய் மற்றும் ஒரு பயனிலை கொண்டு முடிவது தனிச்சொற்றொடர்
    2. ஒரு முதன்மைத் தொடர் மற்றும் முழுமைபெறாத துணைத்தொடர் கொண்டு வருவது தொடர் சொற்றொடர்
    (A) 1 மட்டும் தவறு
    (B) 2 மட்டும் தவறு
    (C) இரண்டும் தவறு
    (D) இரண்டும் சரி

48. கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
    அருவினையும் மாண்ட தமைச்சு.
    மேற்கண்ட குறளில் அமைச்சரின் பணிகள் என்னென்ன?
    1. தொழில் செய்வதற்கு தேவையான கருவி
    2. தொழில் செய்ய ஏற்ற காலம்
    3. செயலின் தன்மை
    4. தொழில் செய்யும் முறை
    5. ஆட்சி முறைகளைக் கற்றல்
    6. ஒரு செயலை செய்வதற்குரிய முறைகளை நூல் வழியே கற்றல்
    (A) 1, 2, 3, 5
    (B) 2, 3, 4, 6
    (C) 1, 2, 3, 4
    (D) 3, 4, 5, 6

49. தொடரில் விடுபட்ட இடத்தில் சரியாக பொருந்தும் வார்த்தையை தேர்ந்தெடு.
    1. வெயிலில் அலையாதே உடல் ---------- விடும்.
    2. வானம் ------ தொடங்கியது. மழைவரும் போலிருக்கிறது.
    (A) கருக்க, கறுத்து
    (B) பாதிக்கும், இருள
    (C) கறுத்து, கருக்க
    (D) சோர்வு, கருக்க

50. கீழ்கண்ட வாக்கியங்களில் தவறானது எது.

1. கம்பன் இசைத்த கவியெல்லாம் நான் என்று பாரதிதாசன் பெருமைப்படுகிறார்.
2. சாயாவனம் என்னும் புதினத்தால் எழுத்துலகில் புகழ்பெற்றவர் சா. கந்தசாமி
3. தொலைந்துபோனவர்கள், சூரியவம்சம், சாந்தகுமாரி என்ற புதினங்களை இயற்றியவர் சா. கந்தசாமி
4. ஓசை தரும் இன்பம் உவமையிலா இன்பமடா என்று பாரதிதாசன்; சொல்கிறார்.

(A) 1 மற்றும் 2
(B) 2 மற்றும் 3
(C) 1 மற்றும் 4
(D) 2 மற்றும் 4

51. 'தாதுகு சோலைதோறுஞ் சண்பக் காடுதோறும்
போதவிழ் பொய்கைதோறும் புது மணற் றடங்கடோறும்
மாதவி வேலிப்பூ வனம்தொறும் வயல்கடோறு
மோதிய வுடம்புதோறு முயிரென வுலாயதன்றே'

மேற்கண்ட கம்பராமாயண பாடலில் கூறப்பட்டுள்ள நதியின் பெயர் என்ன?

(A) காவேரி
(B) கங்கை
(C) சரஸ்வதி
(D) சரயு

52. வெய்யோன் ஒளி தன் மேனியில் விரி சோதியில் மறையப்
பொய்யோ எனும் இடையாளொடும் இளையானொடும் போனான் - என்ற பாடல் வரியில் வெய்யோன் என்பது யாரைக் குறிக்கிறது.

(A) நக்கீரன்
(B) குகன்
(C) லட்சுமணன்
(D) ராமன்

53. பிள்ளைத் தமிழ் பற்றி சரியானது எது.
   1. 96 வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று பிள்ளைத்தமிழ்
   2. இறைவனையோ, தலைவரையோ, அரசனையோ பாட்டுடைத் தலைவராகக் கொண்டு, அவரைக் குழந்தையாகக் கருதிப் பாடுவர்.
   3. பாட்டுடைத் தலைவரின் செயற்கரிய செயல்களை எடுத்தியம்புவது பிள்ளைத்தமிழ்
   4. பத்துபருவங்கள் அமைத்து பருவத்திற்குப் பத்துப்பாடல் என நூறு பாடல்களால் இது பாடப்பெறும்.
   5. இருபாலருக்கும் பொதுவான பருவங்கள் எட்டு.

(A) 1 2 3 4
(B) 2 3 4 5
(C) 2 3 4 5
(D) 5 4 3 2

54. ‘தமிழில் மட்டும் பயன்படுத்தப்பட்டுத் தமிழுக்கே சிறப்பாக உரியனவாகக் கருதப்படும் சொற்கள் மட்டுமின்றி தெலுங்கு, கன்னடம் முதலிய பிற திராவிட மொழிகளுக்குரியனவாகக் கருதப்படும் சொற்களும் தமிழில்உள” என்ற வரிகள் எந்நூலில் எந்த அறிஞரால் கூறப்பட்டுள்ளது.

(A) ஒன்றே உலகம், தனிநாயக அடிகள்
(B) ஞானசாகரம், மறைமலைஅடிகள்
(C) திராவிட மொழிகளின் ஒப்பியல் இலக்கணம், கால்டுவெல்
(D) சொல்லாய்வுக் கட்டுரைகள், தேவநேயப் பாவாணர்

55. பெரியாருடைய பெரும் பணியை நான் ஒரு தனிமனிதனின் வரலாறு என்றல்ல ஒரு சகாப்தம் - ஒரு கால கட்டம் - ஒரு திருப்பம் - என்று கூறுகிறேன். மேற்கண்ட பெரியாரைப் பற்றிய கூற்றை கூறியவர் யார்.

(A) ப.ஜீவானந்தம்
(B) கருணாநிதி
(C) அண்ணா
(D) கி.ரா

56. படிக்காத மேதை என்று குறிப்படப்படும் அவர் முறையாக கல்லூரிகளில் படிக்கவில்லையே தவிர, தமிழ், இந்திய இலக்கியங்களை மட்டுமின்றி, சோவியத் பிரெஞ்சு இலக்கியங்களைத் தானே படித்து உணர்ந்தது, மட்டுமின்றி, வாழ்க்கையும் ஆழமாகப் படித்தவர் பிறகு அவற்றை வார்த்தைகளில் அழகுறப் படைத்தவர் என்று ஜெயகாந்தனை புகழ்ந்தவர் யார்.

(A) சி.சு. செல்லப்பா
(B) கா. செல்லப்பன்
(C) புதுமைப்பித்தன்
(D) கி.ரா

57. ஏதேனும் ஒரு செயல் நன்றாக முடியுமோ? முடியாதோ? என ஐயம் கொண்ட பெண்கள், மக்கள் நடமாட்டம் குறைவான ஊர்ப்பக்கத்;தில் போய், தெய்வத்தைத் தொழுது நின்று அயலார் பேசும் சொல்லைக் கூர்ந்து கேட்பர். அவர்கள் நல்ல சொல்லைக் கூறின் தம் செயல் நன்மையில் முடியும் தீய மொழியைக் கூறின் தீதாய் முடியும் என்றும் கொள்வர் என்ற செயல் முற்காலத்தில் எவ்வாறு அழைக்கப்பட்டது.
(A) குறிகேட்டல்
(B) முகமன் கூறுதல்
(C) நல்லோர் விரிச்சி கேட்டல்
(D) வாக்கு கேட்டல்

58. ‘அலங்கு கழை நரலும் ஆரிப்படுகர்ச்
சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி’ என்ற வரிகள் இடம்பெற்றுள்ள நூல்?
(A) மலைபடுகடாம்
(B) சிலப்பதிகாரம்
(C) மணிமேகலை
(D) சீவகசிந்தாமணி

59. கரகாட்டத்தைக் கும்பாட்டம் என்றும் குடக்கூத்து என்றும் கூறுவர். இத்தொடருக்கான வினா எது.
(A) கரகாட்டம் என்றால் என்ன?
(B) கரகாட்டம் எக்காலங்களில் நடைபெறும்?
(C) கரகாட்டத்தின் வேறுபெயர்கள் வடிவங்கள் யாவை?
(D) கரகாரட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?

60. ‘வழிந்து ஒழுகுதாரானைக் கண்டு
தொடுத்து வரைப்பனுவல் வாசித்தான் ஆல்’ என்ற வரிகள் எந்நூலில் உள்ளது.
(A) கந்தபுராணம்
(B) திருவிளையாடற்புராணம்
(C) சீறாப்புராணம்
(D) முத்துகுமாரசுவாமி பிள்ளைத்தமிழ்

61. ‘மற்றைய நோக்காது அடிதொறும் வான்பொருள்
அற்று அற்று ஒழுகும் அஃது யாற்றுப் புனலே’ என்ற நன்னூல் வரிகள் எந்தப் பொருள்கோளை குறிக்கிறது?
(A) ஆற்றுநீர்ப்பொருள்கோள்
(B) முறைநிரல்நிறைப் பொருள்கோள்
(C) எதிர் நிரல்நிறைப் பொருள்கோள்
(D) கொண்டு கூட்டுப் பொருள்கோள்

62. ஸ்டீபன் ஹாக்கிங் ----- நினைவு நாளில் பிறந்து, ----- பிறந்த நாளில் இறந்தார்.
(A) கலீலியோ, ஐன்ஸ்டைன்
(B) ஐன்ஸ்டைன், கலீலியோ
(C) நியூட்டன், ஐன்ஸ்டைன்
(D) ஐன்ஸ்டைன், நியூட்டன்

63. சாலச்சிறந்தது என்ற வரிகளில் இடம்பெறுவது -----
(A) பெயரெச்சத்தொடர்
(B) வினையெச்சத்தொடர்
(C) உவமைத்தொடர்
(D) உரிச்சொல்தொடர்

64. வண்மையில்லை யோர்வறுமை யின்மையால் - என்ற கம்பராமாயணப் பாடல் எந்த காண்டத்தில் அமைந்துள்ளது.
(A) அயோத்தியா காண்டம்
(B) பால காண்டம்
(C) ஆரண்ய காண்டம்
(D) யுத்த காண்டம்

65. 'உலையிலிட ஊரடங்கும் ஓர்அகப்பை அன்னம்
இலையிலிட வெள்ளி எழும்' என்று பாடியவர்
(A) சுந்தரகவிராயர்
(B) தமிழழகனார்
(C) காளமேகப்புலவர்
(D) இரட்டைப்புலவர்கள்

66. கீழ்கண்ட வாக்கியங்களில் தவறானது எது.
1. வானத்துத் தேவர்கள் ஆடிய ஆட்டம் எனப் பெருள் கொள்வது தேவராட்டம்.
2. இது பெண்கள் மட்டும் ஆடும் ஆட்டம்.
3. உறுமி எனப் பொதுவாக அழைக்கப்படும் தேவதுந்துபி தேவராட்டத்திற்குரிய இசைக்கருவி.
4. தேவராட்டத்தின் துணையாட்டமாகவும் மயிலாட்டம் ஆடப்படுகிறது.
5. சிலப்பதிகாரத்தில் மாதவி ஆடிய பத்து வகை ஆடல்களில் குடக்கூத்து என்ற ஆடலும் குறிப்பிடப்படுகிறது.
(A) 1 மற்றும் 2
(B) 2, 4 மற்றும் 5
(C) 3, 4 மற்றும் 5
(D) 1, 2, 3, 4, 5

67. இரட்டுறமொழிதல் பாடலில் சங்கத்தவர் காக்க என்பது கடலுக்கு எவ்வாறு ஒப்புமைப்படுத்தப்படுகிறது?
   (A) நீரலையைத் தடுத்து நிறுத்தி சங்கினைக் காத்தல்
   (B) மூன்று வகையான சங்குகள் தருதல்
   (C) முத்தினை அமிழ்ந்து எடுத்தல்
   (D) மிகுதியான வணிகப் கப்பல்கள்

68. கீழ்க்கண்ட கூற்றை கவனி
   கூற்று 1 : எடுத்துக்காட்டு உவமை அணியை உரைநடையில் பயன்படுத்துவதை இணை ஒப்பு என்கிறோம்
   கூற்று 2 : 'புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
   வாய்மையால் காணப்படும்' என்ற குறளில் எடுத்துக்காட்டு உவமை உணி பயின்று வந்துள்ளது.
   (A) கூற்று 1 மற்றும் 2 சரி
   (B) கூற்று 1 மற்றும் 2 தவறு
   (C) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
   (D) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

69. கூற்று 1 : இயல்பான மொழிநடையை உருவாக்கும் மென்பொருள் வேர்டு ஸ்மித்
   கூற்று 2 : ஒரு மென்பொருள் அல்லது கணினிச் செயல்திட்ட வரைவை செயற்கை நுண்ணறிவு எனலாம்
   (A) கூற்று 1 மற்றும் 2 சரி
   (B) கூற்று 1 மற்றும் 2 தவறு
   (C) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
   (D) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

70. தலைப்புக்கும் குறிப்புக்கும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க
   தலைப்பு : செயற்கை நுண்ணறிவு
   குறிப்புகள் : கண்காணிப்புக் கருவி, அசைவு நிகழும் பக்கம் தன் பார்வையைத் திருப்புகிறது. திறன்பேசியில் உள்ள வரைபடம் போக்குவரத்திற்குச் சுருக்கமான வழியைக் காண்பிப்பது
   (A) தலைப்புக்குப் பொருத்தமான குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.
   (B) குறிப்புகளுக்குத் தொடர்பில்லாத தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.
   (C) தலைப்பக்குத் தொடர்பில்லாத குறிப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.
   (D) குறிப்புகளுக்கு பொருத்தமில்லாத தலைப்பு வழங்கப்பட்டுள்ளது

71. கீழ்க்கண்ட கூற்றை கவனி

கூற்று 1 : ‘மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்’ என்று சின்னமனூர் செப்பேடு கூறுகிறது.

கூற்று 2 : கம்பாராமயணம் வடமொழிக் கதையை தழுவி எழுதப்பட்டவையாகும்.

(A) கூற்று 1 மற்றும் 2 சரி
(B) கூற்று 1 மற்றும் 2 தவறு
(C) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
(D) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

72. ஒயிலாட்டத்தில் இரு வரிசையில் நின்று ஆடுகின்றனர். இத்தொடரின் செயப்பாட்டு வினைத்தொடர் எது?

(A) ஒயிலாட்டத்தில் இரு வரிசையில் நின்று ஆடுவர்
(B) ஒயிலாட்டத்தில் இரு வரிசையில் நின்று ஆடப்படுகிறது
(C) ஒயிலாட்டம் இரு வரிசையில் நின்று ஆடப்படுகிறது
(D) ஒயிலாட்டம் இரு வரிசையில் நின்று ஆடப்படுகின்றனர்

73. தமிழ் வார்த்தைக்கு பதிலாக ஆங்கில வார்த்தை இடம்பெற்றுள்ளது. கொடுக்கப்பட்ட பத்தியை படித்து பார்த்து சரியான வார்த்தையை தேர்ந்தெடு. ஐ.நா அவையில் ஒருவர் பேசினால் அவரவர் மொழிகளில் புரிந்துகொள்வதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. மொழிபெயர்ப்பு என்து எழுதப்பட்டதை மொழிபெயர்ப்பது, ஆனால் ஒருவர் பேசும்போதே மொழிபெயர்ப்பது Interpreting என்றே சொல்லப்படுகிறது. ஐ.நா அவையில் ஒருவர் பேசுவதை மொழிபெயர்க்கும் மொழிபெயர்ப்பாளர் பார்வையாளர்களுக்குத் தெரியாதபடி வேறு இடத்தில் இருப்பார். ஒருவர் பேசுவதைக் காதணிகேட்பியில் கேட்டபடி சில நொடிகளில் மொழிபெயர்த்து ஒலிவாங்கி வழியே பேசுவார். அவையில் உள்ள பார்வையாளர் தம்முன் உள்ள காதணிகேட்பியை எடுத்துப் பொருத்திக் கொண்டு அவரது மொழியில் புரிந்துகொள்வார்.

(A) பொருள்
(B) விளக்குவது
(C) விவாதம்
(D) ஆவை

74. நல்ல மொழிபெயர்ப்பாளன் சில மொழி மீறல்களைச் செய்வான். இதன்மூலம் புதிய இலக்கண விதிகளின் தேவையை உருவாக்குவான். செய்யுளையே தன் வெளியீட்டு வடிவமாகக் கொண்டிருந்த தமிழ், அச்சு இயந்திரத்தின் வருகையை ஒட்டி மொழிபெயர்ப்பை எதிர்கொண்டபோது உரைநடை வளர்ச்சியை மேற்கொள்ள வேண்டியிருந்தது. அப்போது தமிழ், ஆங்கிலத் தொடரமைப்புகளையும் கூறுகளையும் ஏற்கவேண்டிய நிலை ஏற்பட்டது. மொழிபெயர்ப்பு இத்தகைய மொழிப் பிரச்சினைகளைக் கடந்து, அதன் தீர்வாக மொழியில் புதுக்கூறுகளை உருவாக்கி வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது. மேற்கண்ட பத்திக்கு பொருத்தமான தலைப்பை தேர்ந்தெடு.
(A) மொழிபெயர்ப்பு வளர்ச்சி
(B) மொழிபெயர்ப்பு செம்மை
(C) மொழிபெயர்ப்பு பயன்
(D) மொழிவளர்ச்சி

75. தமிழின் தொன்மையான இலக்கியங்கள் முன்னரே மொழிபெயர்க்கப்பட்டு அறிமுகமாகியிருந்தால் தமிழின் பெருமை உலகெங்கும் முறையாகப் பரவியிருக்கும். ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தின் தமிழ் இருக்கை அத்தகைய பணிகளில் ஈடுபட வேண்டும். தமிழுக்கு அத்தனை அறிவுச் செல்வங்களும் கிடைக்க வேண்டும். – என்று கூறியவர்.
(A) குலோத்துங்கன்
(B) இரண்டாம் இராஜராஜன்
(C) முதலாம் மகேந்திரவர்மன்
(D) அதிவீரராம பாண்டியன்

76. பொருத்துக.

| | | |
|---|---|---|
| a. Transcribe | - | 1. செயல்படுத்துதல் |
| b. Transfer | - | 2. உருமாற்றுதல் |
| c. Transform | - | 3. மாறுதல் |
| d. Transact | - | 4. படியெடுத்தல் |

(A) 1 2 3 4
(B) 4 3 2 1
(C) 2 3 4 1
(D) 3 2 1 4

77. தவறான ஒன்றை தேர்ந்தெடுத்து எழுதுக.
(A) காடனுக்கும் கபிலனுக்கும் - உம்மைத்தொகை
(B) கைதொழுது - மூன்றாம் வேற்றுமை தொகை
(C) கேள்வியினான் - வினையாலனையும் பெயர்
(D) குண்டலமும் குழைகாதும் - எண்ணும்மை

78. சேவையாட்டம் பற்றிய கூற்றுகளுள் தவறானதை எழுதுக.
   1. தேவராட்டம் போன்றே ஆடப்பட்டு வருகின்ற கலை சேவையாட்டம்
   2. எட்டு முதல் பதின்மூன்று கலைஞர்கள் கலந்து கொள்ள வேண்டுமென்பது பொது மரபு.
   3. ஆண் பெண் வேடமிட்டு ஆடுவதும் உண்டு
   4. இதனை இசைசார்பு கலையாகவும் வழி பாட்டு கலையாகவும் நிகழ்த்துகின்றனர்.

(A) 1, 2, 3 சரி
(B) 2, 1, 4 சரி
(C) 1, 3, 4 சரி
(D) அனைத்தும் சரி

79. கீழ்க்கண்ட கூற்றை கவனி

கூற்று 1 – பெருமாள் திருமொழி நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் ஐந்தாவது திருமொழியாக இடம்பெற்றுள்ளது.

கூற்று 2 – பெருமாள் திருமொழியில் 108 பாடல்கள் உள்ளன.

(A) கூற்று 1, 2 சரி
(B) கூற்று 1, 2 தவறு
(C) கூற்று 1 சரி 2 தவறு
(D) கூற்று 1 தவறு 2 சரி

80. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை – என்ற குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி

(A) வேற்றுமை அணி
(B) உருவக அணி
(C) பொருள்பின்வருநிலைஅணி
(D) உவமை அணி

81. குளிர் காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள்

(A) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள்
(B) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்
(C) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள்
(D) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

82. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன.

(A) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால்
(B) ஊரில் விளைச்சல் இல்லாததால்
(C) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால்
(D) அங்கு வறுமை இல்லாததால்

83. பரிபாடல் ----- எனும் புகழுடையது
(A) நல்ல பரிபாடல்
(B) ஓங்கு பரிபாடல்
(C) புறப்பரிபாடல்
(D) ஒத்த பரிபாடல்

84. நியூட்டன் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் வகித்த கணக்கியல் துறையின் லூகாசியயன் பேராசிரியர் என்ற மதிப்பு மிகுந்த பதவியை வகித்தவர்.
(A) ஸ்டீபன் ஹாக்கிங்
(B) பிளெமிங்
(C) ஜான் வீலர்
(D) ஜான் ஹாக்கிங்

85. 'இலா' என்னும் உரையாடு மென்பொருளை உருவாக்கிய நிறுவனம் எது?
(A) பாரத ஸ்டேட் வங்கி
(B) சாப்ட்வங்கி
(C) ஐ.பி.எம்
(D) இன்போசிஸ்

86. இந்தப் பூவைத் தொடுப்பது எப்படி என்ற கவிதையை இயற்றியவர் யார்.
(A) ஈஸ்வரி
(B) உமா மகேஸ்வரி
(C) பார்வதி
(D) மாயாவதி

87. குலசேகர ஆழ்வார், உய்யவந்த பெருமாளை எவ்வாறு உருவகித்துப் பாடியுள்ளார்?
(A) குழந்தை
(B) அன்னை
(C) தமிழ்
(D) நோயாளி

88. 'கழிந்த பெரும் கேள்வியினான் எனக் கேட்டு முழுது உணர்ந்த' இதில் இடைக்காடனாரின் நண்பராகக் குறிப்பிடப்படும் புலவர் யார்?
(A) பரணர்
(B) ஒட்டக்கூத்தர்
(C) கபிலர்
(D) நக்கீரர்

89. மொழிபெயர்ப்பு பற்றிய தவறான வாக்கியத்தைக் கண்டறிக.
   (A) சின்னமனூர்ச் செப்பேட்டு சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்ததெனக் குறிப்பிடுகிறது
   (B) மொழிபெயர்ப்பு என்ற தொடரைத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.
   (C) இரவீந்திரநாத் தாகூர் 'கீதாஞ்சலி' நூலின் ஆங்கில மொழிபெயர்ப்புக்கு நோபல்பரிசுப் பெற்றார்.
   (D) மொழிபெயர்ப்பு 'பயன்கலை' எனக் குறிப்பிடப்படுகிறது

90. செய்யுளில் எழுவாயாக அமையும் பெயர்ச்சொற்களை அல்லது வினைச் சொற்களை வரிசையாக நிறுத்தி, அவை ஏற்கும் பயனிலைகளையும் அவ்வரிசைப்படியே நிறுத்திப் பொருள் கொள்ளுதல் ---------- ஆகும்.
   (A) விற்பூட்டுப் பொருள்கோள்
   (B) முறை நிரல் நிறைப் பொருள்கோள்
   (C) எதிர் நிரல் நிறைப் பொருள்கோள்
   (D) மொழிமாற்றுப் பொருள்கோள்

91. "ஆலத்து மேல குவளை குளத்துள
   வாலின் நெடிய குரங்கு"
   இஃது எந்த பொருள்கோளின் எடுத்துக்காட்டாகும்?
   (A) மொழிமாற்றுப் பொருள்கோள்
   (B) தாப்பிசைப் பொருள்கோள்
   (C) கொண்டு கூட்டுப் பொருள்கோள்
   (D) அடிமறிமாற்றுப் பொருள்கோள்

92. மாறியுள்ள சீர்களை முறைப்படுத்தி எழுதுக.
   (A) அரியவற்றுள் அரிதே, பெரியாரை எல்லாம்
   (B) அரியவற்றுள் எல்லாம் அரிதே, பெரியாரை
   (C) அரியவற்றுள் எல்லாம், பெரியாரை அரிதே
   (D) பெரியாரை எல்லாம், அரியவற்றுள் அரிதே

93. ஒரு மொழியில் உணர்ந்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவதுதான் மொழிபெயர்ப்பு என்பவர்?
   (A) சி.வை தாமோதரம்பிள்ளை
   (B) மூ.கு ஜெகநாத ராஜா
   (C) மணவை முஸ்தபா
   (D) சி.சு செல்லப்பா

94. ஒரு மொழி வளம்பெறவும் உலகத்துடன் உறவு கொள்ளவும் மொழிபெயர்ப்பு இன்றியமையாததாகும்: உலக நாகரிக வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் மொழிபெயர்ப்பும் ஒரு காரணமாகும் என்பவர்?
   (A) சி.வை தாமோதரம்பிள்ளை
   (B) மூ.கு ஜெகநாத ராஜா
   (C) மணவை முஸ்தபா
   (D) முனைவர் எமினோ

95. அறைக்குள் யாழிசை ஏதென்று
   சென்று எட்டிப் பார்த்தேன் பேத்தி,
   நெட்டுரு பண்ணினால்
   நீதி நூல் திரட்டையே - என்று பாடியவர் யார்?
   (A) பாரதி
   (B) பாரதிதாசன்
   (C) சுரதா
   (D) கண்ணதாசன்

96. நீதி வெண்பாவின் ஆசிரியர் யார்?
   (A) தோப்பில் முகமது மீரான்
   (B) பனு அகமது மரைக்காயர்
   (C) செய்குத்தம்பி பாவலர்
   (D) உமறுப் புலவர்

97. "தளரப் பிணைத்தால் மலர்கள் தரையில் நழுவும்" என்று சொன்ன கவிஞர் உமா மகேஸ்வரி பிறந்த ஊர்?
   (A) திருச்சி
   (B) திருநெல்வேலி
   (C) மதுரை
   (D) தஞ்சாவூர்

98. யாரை உலகத்தார் உறவாக கொண்டு போற்றுவர்?
   (A) விடாமுயற்சி, சிறந்த அறிவாற்றல் இவ்விரண்டையும் இடைவிடாமல் பின்பற்றுபரை
   (B) குற்றம் இல்லாமல் தன் குடி பெருமையை உயரச் செய்து வாழ்பவரை
   (C) ஒரு பொருளாக மதிக்கத்தக்க வரையும் மதிப்பு உடையவராக செய்பவர்
   (D) மனதில் துணிவு உள்ளவர்

நேயம் வளர்ப்போம் ... சைதை சா. துரைசாமியின் மனிதநேய அறக்கட்டளை

99. “இன்மையின் இன்னாதது யாதெனின்
இன்மையின் இன்மையே இன்னா தது”
இந்த குறட்பா இடம் பெற்ற அதிகாரம்?
(A) கூடா நட்பு
(B) கயமை
(C) குடிசெயல்வகை
(D) நல்குரவு

100. கீழ்க்கண்ட கூற்றை கவனி
கூற்று 1 : பெருமாள் திருமொழி நாலாயிரத் திவ்வியப் பிரபந்ததில் ஏழாம் திருமொழியாக உள்ளது.
கூற்று 2 : பெருமாள் திருமொழியை பாடியவர் குலசேகராழ்வார்
(A) கூற்று 1,2 இரண்டும் சரி
(B) கூற்று 1,2 இரண்டும் தவறு
(C) கூற்று 1 சரி 2 தவறு
(D) கூற்று 2 சரி 1 தவறு

******

மனிதநேயம் வளர்ப்போம் மானுடம் மீட்போம் • சைதை சா. துரைசாமியின் மனிதநேய அறக்கட்டளை